Fedha BY CHALLANI


# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் ஐப்பசி 20 | MAALAI EXPRESS | ஹிஜ்ரி 1446 ஜமாதுல் அவ்வல் 3

மாநிலம் பயனுற!

• புதுச்சேரி • புதன்கிழமை, நவம்பர் 6, 2024 • வெளியூர்: 7-11-2024, வியாழக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 • Volume - 10 • Issue - 119 • 6 பக்கம் • ரூ.6


Lille By CHALLANI

## பாம்பன் புதிய பாலம் 20ந் தேதிக்குள் திறப்பு?



**ராமேஸ்வரம், நவ. 6-**

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் கடலின் நடுவே ரூ.545 கோடியில் சுமார் 2 கி.மீ. நீளத்திற்கு புதிதாக ரெயில் பாலம் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது. இந்த பாலத்தின் மையப்பகுதியில் கப்பல்கள் கடந்து செல்வதற்கு வசதியாக 77 மீட்டர் நீளமும், 650 டன் எடையும் கொண்ட செங்குத்து வடிவிலான மேல்நோக்கி திறந்து மூடும் வகையில் தூக்குப்பாலம் அமைக்கப்பட்டு இருக்கிறது. இந்த புதிய பாலத்தில் 3 முறை சரக்கு ரெயில்களை இயக்கி சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. தூக்குப்பாலத்தை திறந்து மூடி பல்வேறு கட்ட சோதனைகளும் செய்யப்பட்டன. பாலத்தை ஆய்வு செய்வதற்காக தெற்கு ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் ஏ.எம்.சவுத்ரி வருகிற 13ந் தேதி பெங்களூருவில் இருந்து சிறப்பு ரெயில் மூலம் மண்டபம் வருகிறார். தொடர்ந்து அவர் 2 நாட்கள் தங்கி புதிய ரெயில் பாலத்தை முழுமையாக பார்வையிட்டு ஆய்வு செய்கிறார்.இந்த ஆய்வுக்கு பின்னர் புதிய ரெயில் பாலத்தின் திறப்பு விழா தேதி அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யப்படும் என கூறப்படுகிறது. அதன்படி வருகிற 20ந் தேதிக்குள் புதிய ரெயில் பாலம் திறப்பு விழா நடந்து, ரெயில் போக்குவரத்து தொடங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாம்பன் புதிய ரெயில் பாலத்தை திறந்து வைக்க பிரதமர் நரேந்திர மோடி, ராமேசுவரம் வர உள்ளதாகவும் ரெயில்வே அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

### கடும் இழுபறி நீடித்த நிலையில்

# 2.5 சதவீதம் வாக்குகள் வித்தியாசத்தில் டிரம்ப் வெற்றி

## 47வது ஜனாதிபதியாக விரைவில் பதவியேற்கிறார்

**அமெரிக்கா, நவ. 6-**

அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவடைந்த நிலையில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்று இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. தற்போது ஸ்விங் மாகாணங்கள் எனக் கருதப்படும் வெற்றித் தோல்வியை நிர்ணயிக்கும் ஏழு மாகாணங்களில் வடக்கு கரோலினா, ஜார்ஜியா ஆகிய இரண்டு மாகாணங்களில் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அரிசோனா, மிச்சிகன், நெவாடா, பென்சில்வேனியா மற்றும் விஸ்கான்சின் மாகாணங்களில் கடும் இழுபறி நீடித்து வருகிறது.

வடக்கு கரோலினாவில் டிரம்ப் சுமார் 3.2 சதவீத வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அதனைத் தொடர்ந்து ஜார்ஜியாவில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. டொனால்டு டிரம்ப் கமலா ஹாரிஸ் இடையே கடும் இழுபறி நீடித்து வந்தது.

தொடக்கத்தில் சுமார் ஆயிரம், இரண்டாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில்தான் டொனால்டு டிரம்ப் முன்னிலை பெற்றிருந்தார். இதனால் கடும் இழுபறி



நீடித்து வந்தது. அதன்பின் கொஞ்சம் கொஞ்சமாக வாக்கு வித்தியாசம் அதிகரித்தது. இறுதியில் கமலா ஹாரிஸை விட 2.5 சதவீதம் வாக்குள் அதிகம் பெற்று டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றார்.

டொனால்டு டிரம்ப் 26,36,905 வாக்குகள் பெற்றார். கமலா ஹாரிஸ் 25,09,360 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். வாக்கு வித்தியாசம் 1,27,545 ஆகும். டொனால்டு டிரம்ப் 50.9 சதவீதம் வாக்குகள் பெற்ற நிலையில், கமலா ஹாரிஸ் 48.4 சதவீதம் வாக்குகள் பெற்றார். இந்த வெற்றி மூலம் டொனால்டு டிரம்ப் 16 எலக்டோரல் வாக்குகளை பெற்று மொத்தம் 247 வாக்குகளுடன் முன்னிலை பெற்றுள்ளார். கமலா ஹாரிஸ் 210 வாக்குகள் பெற்றுள்ளார்.

இதனால் அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக டிரம்ப் விரைவில் பதவியேற்க உள்ளதாக கூறப்படுகிறது. இந்தநிலையில் அமெரிக்காவில் டிரம்ப்பின் ஆதரவாளர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.




E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
• புதன் • நவம்பர் 6, 2024

# சினிமா நடிகை கஸ்தூரி மீது நடவடிக்கை எடுக்க போலீசில் புகார்



**கயத்தாறு, ஆக. 6–**

கயத்தாறு காவல் நிலையத்தில் கயத்தாறு வட்டார கம்வார் சங்கத்தின் தலைவர் பேட்டை அ.மாரியப்பன் தலைமையில் நிர்வாகிகள் சினிமா நடிகை கஸ்தூரி மீது நடவடிக்கை எடுக்க கோரி மனு கொடுத்தனர். இந்த மனுவில் அவர்கள் கூறியதாது, நானும், என் பகுதியில் வசிக்கும் மக்கள் தெலுங்கை தாய் மொழியாக கொண்ட நாட்டுப்பற்றும், வீரமும் மிக்க பாரம்பரியமான சமூகமான நல்லிணக்கம் கொண்ட முன்னோர்களனா முதல் விடுதலைப் போராட்ட தியாகி வீரபாண்டிய கட்டபொம்மன் தமிழ் பேசும் மக்களுடன் நல்லுறவுடனும், வாழும் மக்களாகவும் உள்ளோம். சென்னையில் நடிகை கஸ்தூரி என்பவர் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் தெலுங்கு பேசும் மக்கள் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு ராஜாக்களின் அந்தப்புர பணியாளர்களுக்கு சேவை செய்ய வந்தவர்கள் என்றும், தெலுங்கர்கள் தரம் தாழ்ந்த வேலை செய்பவர்கள் போல் பேசி, தெலுங்கு பேசும் மக்கள் யாவரையும் இழிவு படுத்தியும், அவமானப்படுத்தியும் பேசி உள்ளார். இந்த தொலைக்காட்சி பதிவு கண்ட நானும், தெலுங்கு பேசும் என் பகுதி மக்களும் மிகுந்த மனவேதனைக்கும் உண்டாக்கியது. எனவே நடிகை கஸ்தூரி மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியுள்ளனர்.

# ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆட்சியர் ஆய்வு



தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம், தலைவன்கோட்டை மற்றும் தென்மலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் அடிப்படை வசதிகள் மற்றும் மருத்துவமனையின் தரம் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்



**திருவண்ணாமலை, நவ.6–**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் நடைபெற்றது.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு தனியாக இருக்கைகள் அமைத்து, அமரவைக்கப்பட்டு அவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு அதற்கான தீர்வுகளை உடனடியாக வழங்க மாற்றுத்திறனாளி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, கைகுழந்தைகளுடன் மனு அளிக்க வரும் தாய்மார்களுக்கு பால் வழங்கி, அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள்.

மேலும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கல்வி உதவித் தொகை, வங்கிக் கடனுதவி, முதியோர் உதவித் தொகை, வீட்டு மனைப்பட்டா, சாதிச்சான்று, வேலை வாய்ப்பு, விதவை உதவித் தொகை, மாற்றுத்திறனாளி களுக்கான உதவித் தொகை மற்றும் உபகரணங்கள், சாலை வசதிகள், பிரதான் மந்திரியின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், வேளாண்மை துறை சார்ந்த பயிர்க்கடன்கள், புதிய நீர்தேக்க தொட்டி அமைத்து தருதல், தாட்கோ மூலம் கடனுதவி, கூட்டுறவு சங்ககளில் பயிர் கடன்கள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 467 மனுக்கள் பெறப்பட்டது. இக்கூட்டத்தில் பெண்கள், வயதானவர்கள், கைக்குழந்தை வைத்திருக்கும் பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளி களுக்கும் முன்னுரிமை அளித்து அவர்களை அமர வைத்து மனுக்களை பெறுவதோடு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தலின் படி செய்யார் சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 48 மனுக்களும், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 65 மனுக்களும் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கப்பட்டது.

இன்றையதினம் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு, பழங்குடியினர் நலத்துறை மற்றும் இந்திய சிறுதானிய ஆராய்ச்சி நிறுவனம் ஹைதராபாத் இணைந்து தொல்குடி வேளாண்மை மேலாண்மை திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 35 பழங்குடியின விவசாயிகளுக்கு ஆறு வகையான சிறுதானிய விதைத் தொகுப்பைமாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ராம்பிரதீபன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் மந்தாகினி, திட்ட அலுவலர் பழங்குடியினர் நலத்துறை கலைச்செல்வி, மற்றும் அனைத்து துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# எண்ணெய் பனை நடவு விழா



புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வீரடிப்பட்டி கிராமத்தில், தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை மற்றும் கோத்ரேஜ் அக்ரோவெட் லிமிடெட் இணைந்து நடத்தும், மாபெரும் எண்ணெய் பனை நடவு விழாவில், பனை கன்றுகள் நடும் பணியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா துவக்கி வைத்தார். அருகில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை.

# காலாண்டு தேர்வு தேர்ச்சி விகிதம் குறித்து ஆட்சியர் ஆய்வு





வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் 10, 11, 12ம் வகுப்பு ஆசிரியர்களுடன் காலாண்டு தேர்வு தேர்ச்சி விகிதம் குறித்து பாடவாரியாக ஆய்வு மேற்கொண்டார். அருகில் முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி, மாவட்ட கல்வி அலுவலர்கள் தயாளன்.

# மானிய விலையில் விவசாயிகளுக்கு இயந்திரம் வழங்கல்



தூத்துக்குடி மாவட்டம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் புதுக்கோட்டை வட்டார வேளாண்மை விரிவாக்க மைய வளாகத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இயந்திரங்களை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு தலைவர் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலைக்குமார், ஆரணி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, தர்மபுரி சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத், சட்டப்பேரவை முதன்மை செயலாளர் சீனிவாசன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா.

# சாலையில் திரிந்த 5 மாடுகள் பறிமுதல்



காரைக்கால், நவ. 6–

காரைக்கால் திருவேட்டக்குடி சாலையில், திரிந்த 5 மாடுகளை கோட்டுச்சேரி போலீசார் பறிமுதல் செய்தனர்.

காரைக்கால் மாவட்ட சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக, கால்நடைகளை திரியவிட்டால், கால்நடை பறிமுதல் செய்வதுடன், கால்நடையின் உரிமையாளர் மீது கைது நடவடிக்கை எடுக்கப்படும். என, மாவட்ட போக்குவரத்து இன்ஸ்பெக்டர் லெனின்பாரதி எச்சரிக்கை விடுத்திருந்தார். அதன் ஒரு பகுதியாக, காரைக்காலை அடுத்த கோட்டுச்சேரி திருவேட்டக்குடி சாலையில், கோட்டுச்சேரி போலீசார் நேற்று முன்தினம் மாலை ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தபோது, போக்குவரத்துக்கு இடையூறாகவும், விபத்தை ஏற்படுத்தும் வகையிலும் திரிந்த 5 மாடுகளை பறிமுதல் செய்து, மாடுகளின் உரிமையாளர் திருவேட்டக்குடி ஹரிசிவன் நகரைச்சேர்ந்த வெங்கடராமனை(53) கோட்டுச்சேரி போலீசார் செய்து, மாவட்ட கோர்ட்டில் ஆஜர்படுத்தினார். மாடுகளையும் போலீசார் பறிமுதல் செய்தனர்.

# ஆதிதிராவிடர் சிறப்புகூறு நிதியை இந்த நிதியாண்டுக்குள் முழுமையாக செலவு செய்ய வேண்டும்: முதலமைச்சர் ரங்கசாமி அதிரடி உத்தரவு

புதுச்சேரி, நவ. 6–

ஆதிதிராவிடர் சிறப்புகூறு நிதியை நான்கு மாதத்திற்குள் முழுமையாக செலவு செய்ய வேண்டும் என, முதலமைச்சர் ரங்கசாமி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

புதுச்சேரி அரசால் நடப்பு ஆண்டில் ஆதிதிராவிட சிறப்புகூறு நிதி ரூ.488 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி 20 துறைகள் மூலம் ஆதிதிராவிடர் மக்களுக்கான நலத்திட்டங்கள் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டங்களைக் கண்காணிக்கவும் ஆதிதிராவிடர் சிறப்புகூறு நிதி சரியாக செலவிடப்படுவதை உறுதிப்படுத்தவும் முதலமைச்சர் ரங்கசாமி தலைமையிலான மாநில அளவிலான ஆதிதிராவிடர் வளர்ச்சி குழு உருவாக்கப்பட்டுள்ளது.



குழுவின் முதல் கூட்டம் முதலமைச்சர் ரங்கசாமி தலைமையில் சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தில் ஆதிதிராவிடர் சிறப்புக்கூறு நிதியின் பயன்பாடு குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. ஆதிதிராவிடர் சிறப்பு கூறு நிதியை இந்த நிதி ஆண்டிற்குள் விரைந்து செலவு செய்யவும், திட்டங்கள் சரியான முறையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு சென்றடையவும், அரசுத்துறைகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் ரங்கசாமி அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சாய் ஜெ. சரவணன்குமார், துணை சபாநாயகர் ராஜவேலு, எம்.எல்.ஏ.,க்கள் அங்காளன், சந்திரபிரியங்கா, வளர்ச்சி ஆணையர் மற்றும் அரசு செயலர் நிதி ஆசிஷ் மாதவ்ராவ் மோரே, அரசு செயலர்கள் ஜவகர், முத்தம்மா, கேசவன், ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் இளங்கோவன் மற்றும் தொடர்புடைய பல்வேறு துறைகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

# தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகங்களை அமைச்சர் ஆய்வு



கிருஷ்ணகிரி, நவ. 6–

கிருஷ்ணகிரி மாவட்டம், முதன்மை கல்வி அலுவலர் அலுவலகம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட திட்ட அலுவலகம் மற்றும் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகங்களை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட திட்ட அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, புதிய பாரத எழுத்தறிவு திட்டத்தின் கீழ் வருகின்ற நவம்பர் 10ஆம் தேதி தேர்வு நடைபெறவுள்ளதை முன்னிட்டு நடைபெற்றுக் கொண்டிருந்த இணையவழி கலந்தாய்வு கூட்டத்தில் கிருஷ்ணகிரியில் இருந்து கலந்துகொண்டது, சென்னையில் உள்ள இயக்குநர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்தது. கலந்தாய்வின் நோக்கத்தை அறிந்துகொண்ட அமைச்சருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

தொடர்ந்து, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் ‘உயர்வுக்கு படி’ போன்ற திட்டங்களை அதிகளவில் மாணவர்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, அதன் அருகில் இருந்த தொடக்கக் கல்வி அலுவலர; மற்றும் முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்திலும் விரிவான ஆய்வு மேற்கொண்டார். விலையில்லா பொருட்கள் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள நிலை குறித்தும், மாவட்ட அளவில் தேர்ச்சி விகிதம் குறித்தும், அலுவலர்களின் கோரிக்கைகள் குறித்தும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கேட்டறிந்தார்.

# விழுப்புரத்தில் வளர்ச்சி திட்ட பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு




விழுப்புரம், நவ. 6–

விழுப்புரத்தில் மாவட்ட திட்ட வளர்ச்சி பணிகள் குறித்து அனைத்து துறை அதிகாரிகள் உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் பொன்முடி, மாவட்ட ஆட்சியர் பழனி, முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான், விழுப்புரம் எம்எல்ஏ லட்சுமணன், விக்கிரவாண்டி எம்எல்ஏ அன்னியூர் சிவா, மயிலம் தொகுதி எம்எல்ஏ சிவக்குமார், உளுந்தூர்பேட்டை எம்எல்ஏ மணிக்கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# காரைக்கால் நித்யகல்யாணப்பெருமாள் கோவில் கும்பாபிஷேக திருப்பணிகள் தொடக்கம்





காரைக்கால், நவ. 6–

காரைக்கால் ஸ்ரீ நித்யகல்யாணப் பெருமாள் கோவில் கும்பாபிஷேக திருப்பணிகள் நேற்று தொடங்கியது.

காரைக்காலில் அமைந்துள்ள புகழ்பெற்ற நித்யகல்யாணப் பெருமாள் கோவில் கும்பாபிஷேக பணிகளை முன்னிட்டு, திருப்பணிகள் நேற்று தொடங்கியது. இதற்காக நித்யகல்யாணப் பெருமாள் கோவிலில் உள்ள சக்கரத்தாழ்வார், நரசிம்மர், ஆண்டாள், ஆஞ்சநேயர் ஆகிய மூல மூர்த்திகளுக்கு பாலஸ்தாபனம் செய்ய பூர்வாங்க பூஜைகள் நடைபெற்றது. யாகசாலை பூஜைகள், மகா பூர்ணாஹூதி, பாலஸ்தாபனம் பூஜைகளுடன் தீபாராதனை நிகழ்ச்சிகள் வெகு விமரிசையாக நடைபெற்றது. தொடர்ந்து மூல மூர்த்திகளுக்கு அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து நித்யகல்யாணப் பெருமாள், ரங்கநாயகி தாயார், தேவி, மூதேவி, சக்கரத்தாழ்வார், நரசிம்மர், ஆண்டாள், ஆஞ்சநேயர், ராமானுஜர் ஆகிய கோவில் உற்சவ மூர்த்திகள் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளினர். பின்னர் மகா தீபாராதனை நடைபெற்றது. இதில் கோவில் தனி அதிகாரி காளிதாசன், கோவில் திருப்பணி கும்பாபிஷேக குழுவினர் மற்றும் கோவில் பட்டாச்சாரியார்கள் உள்ளிட்ட திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

# எம்எஸ்எம்இ இணை இயக்குநருக்கு பாராட்டு



ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் சார்பில் நடத்தப்பட்ட கண்காட்சியில் எஸ்சி, எஸ்டி பிரிவினர் வைத்த கடைகளுக்கு 100 சதவீதம் மானியம் வழங்கியதற்கு எம்எஸ்எம்இ இணை இயக்குநர் சுரேஷ் பாபுஜிக்கு, கூட்டமைப்பின் தலைவர் ராஜமாணிக்கம், பொதுசெயலாளர் ரவிச்சந்திரன், பொருளாளர் முருகானந்தம் ஆகியோர் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

# கோவையில் மீண்டும் கம்பேக் கொடுத்து இருக்கிறார் செந்தில் பாலாஜி: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

கோவை, நவ. 6–

அரசின் நலத்திட்டங்கள் பொதுமக்களை சரியாக சென்றடைகிறதா? என்பதை நேரில் சென்று கேட்கும் வகையில், ‘கள ஆய்வில் முதல்அமைச்சர்’ என்ற புதிய திட்டத்தை முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னெடுத்து உள்ளார்.

இந்த திட்டத்தில் முதல் அமைச்சர், முக்கிய அமைச்சர்கள், அரசுத் துறை செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் ஆகியோருடன் மாவட்ட வாரியாக சென்று நிர்வாக பணிகளையும், வளர்ச்சி மற்றும் நலத்திட்ட பணிகளையும் ஆய்வு செய்வார். அதன்படி கோவையில் முதல் முறையாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு பணியை நேற்று தொடங்கினார்.



2வது நாளாக கோவையில் தங்கி கள ஆய்வு செய்து வரும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கோவை அனுப்பர்பாளையத்தில் கலைஞர் நூலகம், அறிவியல் மையத்திற்கு அடிக்கல் நாட்டினார். அதனை தொடர்ந்து அவர் பேசியதாவது: கோவை மாநகர மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து உள்ளேன். 8 தளங்களுடன் 1,98,000 சதுர அடி பரப்பில் நூலகம் அமைய உள்ளது. மாணவர்களை சந்திக்கும் போது புதிய உத்வேகம் ஏற்படுகிறது. மதுரை நூலகத்தை பல்லாயிரக்கணக்கானோர் பயன்படுத்துகின்றனர். கோவை நூலகம் 2026ஆம் ஆண்டு திறக்கப்படும். கோவை நூலகம் கம்பீரமாக மிகச் சிறப்பாக அமையும்.

தங்க நகை வியாபாரிகள் பல கோரிக்கைகளை வைத்துள்ளனர். கோவையில் கலைஞர் நூலகம், அறிவியல் மையம் 2026ல் ஜனவரியில் திறக்கப்படும். கோவையில் அரசு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த செந்தில் பாலாஜி கம்பேக் கொடுத்து இருக்கிறார். சிறப்பாக செயல்பட்ட செந்தில்பாலாஜிக்கு இடையில் சில தடைகளை ஏற்படுத்தினர். ஆனால் தடைகளை உடைத்து மீண்டும் வந்திருக்கிறார். தொடர்ந்து கோவைக்காக சிறப்பாக செயல்படுவார் அமைச்சர் செந்தில் பாலாஜி அது உறுதி.

கடந்த சட்டமன்றத் தேர்தல், நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலை விட திமுகவின் செல்வாக்கு அதிகமாகி இருக்கிறது. இதுதான் பலரும் நம்மை விமர்சிக்க காரணம். எத்தனை விமர்சனங்கள் வந்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல், மக்களுக்கான பணிகளை தொடர்ந்து செய்து கொண்டுதான் இருப்போம்.

வட மாநிலங்கள் மற்றும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒப்பிட்டு பாருங்கள் வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்ற நிலையை மாற்றி தெற்கை நாங்கள் வளர்த்திருக்கிறோம். தமிழ்நாடு பல்வேறு நிலைகளில் இந்தியாவிலேயே முன்னேறிய மாநிலமாக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

பள்ளிக்கல்வித்துறை சார்பில் ரூ.300 கோடி மதிப்பில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அறிவியல் மையம் அமைகிறது.

E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
• புதன் • நவம்பர் 6, 2024

# திமுக இளைஞர் அணி ஆலோசனை கூட்டம்




மதுரை, நவ. 6–

மதுரை மாவட்டம் திருமங்கலத்தை அடுத்த கள்ளிக்குடியில், மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில், முதலமைச்சர் முக ஸ்டாலின். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனையின் படி நடைபெற்ற இளைஞர் அணி மற்றும் மகளிர் அணிக்கான ஆலோசனை கூட்டம் தெற்கு மாவட்ட செயலாளர் மணி மாறன் தலைமையில் நடைபெற்றது. தொகுதி பொறுப்பாளர் வனராஜா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் வருகிற 2026ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் திமுக 200 தொகுதிக்கு மேல் வெற்றி பெறச் செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். அதற்கு முன்மாதிரியாக திருமங்கலம் தொகுதி திகழ வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய தெற்கு மாவட்ட திமுக செயலாளர் மணிமாறன், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் புதிது, புதிதாக யாராக இருந்தாலும் கட்சியை தொடங்கட்டும், அதனை கவனத்தில் கொள்ளாமல், நமது தமிழக முதல்வர் அனைத்தையும் பார்த்துக் கொள்வார். ஆகையால் இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள், தமிழக முதல்வரின்சிறப்பான திட்டங்களையும், மக்கள் சேவைகளுக்காக செய்யக்கூடிய பணிகள் மற்றும் வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதை திண்ணை பிரச்சாரங்கள் மூலமாகவும், வாட்ஸ் அப் செயலி மூலமும் மக்களுக்கு தெரிவிப்பதுடன், தொடர்ந்து மக்களுக்கான பணியை நமது கழக நிர்வாகிகள் செயலாற்றி வரவேண்டும் எனவும், மதுரை தெற்கு மாவட்டத்தில் உள்ள திருப்பரங்குன்றம் திருமங்கலம் உசிலம்பட்டி ஆகிய மூன்று எம்எல்ஏ தொகுதிகளிலும் புதிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற தொண்டர்கள், இளைஞர்கள் பாடுபட வேண்டும் என்றும் கூறினார்.

அதனை தொடர்ந்து குராயூர் கிராமத்தில், திமுக சார்பில் பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் திருவுருவச்சிலை அமைப்பதற்கு ரூபாய் 3லட்சம் நிதியை, அக்கிராம நிர்வாக கமிட்டியிடம் வழங்கப் பட்டது. இந்நிகழ்வில் முன்னாள் எம்எல்ஏ லதா அதியமான் ஒன்றிய செயலாளர்கள் மதன்குமார், ஆலம் பட்டி சண்முகம், ஜெயச்சந்திரன், தனபாண்டியன், ராமமூர்த்தி, இளைஞரணி நிர்வாகிகள் ஆதவன், விமல், கருவேலம்பட்டி வெற்றி, திருமங்கலம் நகராட்சி தலைவர் ரம்யா, முத்துக்குமார், மாவட்ட கவுன்சிலர் கீர்த்திகா தங்கபாண்டி, தலைமை செயற்குழு உறுப்பினர் இளமகிலன், பொதுக்குழு உறுப்பினர்கள் பிஎஸ்என்எல் செல்வம், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் செல்வேந்திரன், திமுக பிரதிநிதிகள் ஞானசேகர், சூரி, சுரேஷ் உள்ளிட்ட தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# விழுப்புரம் அரசு மாதிரி பள்ளியில் துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு



விழுப்புரம், நவ. 6–

விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சாலமேடு பகுதியில் அமைந்துள்ள விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி பள்ளியில், தமிழ்நாடு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

“தமிழ்நாடு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் (5.11.2024) நேற்றிரவு விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சாலமேடு பகுதியில் அமைந்துள்ள விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார். விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சாலமேடு பகுதியில் அமைந்துள்ள ஆசிரியர் பயிற்சி கல்லூரி வளாகத்தில், விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி உண்டு, உறைவிட பள்ளி செயல்பட்டு வருகின்றது.

பள்ளி தகவல் தொகுப்பு மேலாண்மை அமைப்பின் (எமிஸ்) மூலமாக பெறப்பட்ட தகவல்களில், மாணவ, மாணவிகளின் கல்வித் தகுதிகளின் அடிப்படையில் விழுப் புரம் மாவட்டம் முழுவதும் இருந்து அரசு பள்ளிகளைச் சேர்ந்த சிறந்த மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் ஐ.ஐ.டி, மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட சிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் பயில பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு பள்ளி வளாகத்திலேயே விடுதி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை கல்வி பயிற்றுவிக்கப்பட்டு வரும் இப்பள்ளியில் மொத்தம் 287 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். உண்டு உறைவிட வசதியுடன் செயல்பட்டு வரும் இப் பள்ளியில் 181 மாணவ, மாணவியர்கள் 11 மற்றும் 12ம் வகுப்பு பயின்று வருகின்றார்கள்.

இப்பள்ளியில் ஆய்வு மேற் கொண்ட துணை முதல்அமைச்சர், வருகை பதிவேட்டினை பார்வையிட்டு தங்கியுள்ள மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையை சரிபார்த்தார். மேலும் விடுதியின், சமையற்கூடம், மாணவ, மாணவியர்கள் தங்குமிடம் ஆகியவற்றை பார்வையிட்டு அவர் களுடன் கலந்துரையாடி கற்றல் திறன் மேம்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதனடிப்படையில் மாணவ, மாணவியர்களுக்கு ஆங்கில அகராதி (English Dictionary) மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். மாணவ, மாணவியர்கள் அனைவரும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த வசதிகளை பயன்படுத்தி, நாட்டின் தலை சிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் இடம் பெறும் வகையில் நன்கு கல்வி பயில வாழ்த்து தெரிவித்தார்.

மேலும் துணை முதல்அமைச்சர், விடுதியில் குடிநீர் வசதி, சமையலறை, கழிப்பிட வசதிகளையும், பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டுள்ள சி.சி.டி.வி. அமைப்பின் பதிவுகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உணவுப் பொருட்களின் இருப்பு குறித்தும், மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவு வகைகளின் விவரங்கள் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர் ரா.லட்சுமணன் (விழுப்புரம்), அன்னியூர் அ.சிவா (விக்கிரவாண்டி), சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அஹமது, மாவட்ட கலெக்டர் சி.பழனி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) சுருதஞ் ஜெய் நாராயணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் உள்பட ஆசிரியர்கள் உடனிருந்தனர்.”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காரைக்காலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டம்



காரைக்கால், நவ. 6–

முழுமை பெறாத கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் வரைவு மீது நடைபெற உள்ள கருத்து கருத்து கூட்டத்தை உடனடியாக ரத்து செய்ய கோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். காரைக்கால் கடற்கரை சாலையில் காரைக்கால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், நேற்று நடைபெற்ற, இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, மாவட்ட செயலாளர் தமீம் தலைமை தாங்கினார். புதுச்சேரி மாநில செயற்குழு உறுப்பினர் துரைசாமி முன்னிலை வகித்தார். புதுச்சேரி மாநில செயற்குழு உறுப்பினர்கள் தமிழ்ச்செல்வன், வின்சென்ட், கடலோர மக்கள் வாழ்வுரிமை இயக்கம் புதுச்சேரி மூத்த நிர்வாகி அருண் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019 காரைக்கால் மாவட்ட மீனவர் கிராமங்களில் அளவிட்டு, நிலங்களை கையகப்படுத்தும் புதுச்சேரி அரசின் செயலுக்கு முதலில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. முழுமை பெறாத கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் வரைவு மீது நடைபெற உள்ள கருத்து கருத்து கூட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். காரைக்கால் மாவட்ட மீனவர் கிராமங்களில் அடிப்படை வசதிகளான சுத்தமான குடிநீர், வீடற்ற மக்களுக்கு இலவச மனை பட்டா, தடையற்ற மின்சாரம், தரமான சாலை உள்ளிட்ட வசதிகளை உடனடியாக செய்து தர வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

# அண்ணாமலை பல்கலையுடன் எகோ ஆசியா பன்னாட்டு ஆராய்ச்சி மையம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



சிதம்பரம், நவ. 6–

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் எகோ ஆசியா என்ற பன்னாட்டு ஆராய்ச்சி மையம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டது. வேளாண்மை மற்றும் பல்கலைக்கழகத்தில் உள்ள இதர துறைகளுடன் இணைந்து உயர் ஆராய்ச்சிகளை செய்தல், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திறன் மேம்பாடு, மாணவர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், பாரம்பரிய வேளாண் தொழில்நுட்ப பாதுகாப்பு, பாரம்பரிய விதை பராமரிப்பு மற்றும் கடலோர மாவட்ட உழவர்களின் வாழ்வாதார மேம்பாட்டு பணிகளை இணைந்து செய்ய இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது. பல்கலைக்கழக துணைவேந்தர் முதுமுனைவர். இராம.கதிரேசன் மற்றும் எகோ ஆசியா ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் பேட்ரிக் செயில் இந்த ஒப்பந்தத்தை செய்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் எகோ ஆசியா மையத்தின் தெற்காசிய தலைவர் கிளாடுஸ்டோன் ராஜேஷ்குமார், பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாடு அதிகாரி முனைவர் ஆர்.எஸ்.குமார், புரிந்துணர்வு ஒப்பந்த மைய ஒருங்கிணைப்பாளர் முனைவர் பெ. கருப்பையா, இயந்திர பொறியியல் துறைத்தலைவர் முனைவர். எஸ். வைத்தியநாதன், பல்கலைக்கழக உள்தர மதிப்பீட்டு மைய துணை இயக்குனர் முனைவர் எஸ். ரமேஷ் குமார், மக்கள் தொடர்பு அதிகாரி க.ரெத்தினசம்பத், துணைவேந்தரின் நேர்முக உதவியாளர் ஜே.எச். பாக்யராஜ், புரிந்துணர்வு மைய தனி அதிகாரி பாலாஜி மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

# மணிமுத்தாறு அணையிலிருந்து தண்ணீர் திறப்பு




நெல்லை, நவ. 6–

திருநெல்வேலி மாவட்டம், மணி முத்தாறு அணையிலிருந்து பெருங் கால் பாசன பிசான பருவ சாகுபடிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கார்த்தி கேயன் தண்ணீர் திறந்து வைத்து, மலர் தூவினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்தி கேயன்தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, அம்பா சமுத்திரம் வட்டம், மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து பெருங்கால் பாசனம் மூலம் பயன்பெறும் 2756.62 ஏக்கர் நேரடி மற்றும் மறைமுக பாசன பகுதிகளுக்கு 31.03.2025 வரை 146 நாட்களுக்கு பிசான பருவ சாகுபடிக்கு 35 கனஅடிக்கு மிகாமல் நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தைப் பொறுத்து தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

இதன்மூலம், அம்பாசமுத்திரம் வட்டத்தைச் சார்ந்த ஜமீன்சிங்க ம்பட்டி, அயன்சிங்கம்பட்டி, வைராவிகுளம், தெற்குபாப்பான்குளம், தெற்கு கல்லிடைக்குறிச்சி ஆகிய பகுதிகளில் பாசனபரப்பு பயன் பெறும். எனவே, விவசாய பெருமக்கள் தண்ணீரை மிக சிக்கனமாக பயன்படுத்தவும், நீர் விநியோக பணியில் நீர்வளத்துறைக்கு விவசாய பெருமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், சேரன்மகாதேவி சார்ஆட்சியர் அர்பித்ஜெயின், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய தலைவர் பரணிசேகர், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) வில்லியம் ஜேசுதாஸ், செயற்பொறியாளர் மதனசுதாகரன், உதவிசெயற் பொறியாளர் முருகன், மணிமுத்தாறு பேரூராட்சி தலைவர் அந்தோணி அம்மாள், வட்டாட்சியர் நவாஸ், உதவி பொறியாளர்கள் ராம்சூரியா, தினேஷ்குமார் உட்பட அரசு அலுவலர்கள் மற்றம் விவசாயபெருமக்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

# போதை தடுப்பு விழிப்புணர்வு வாசகம் வெளியீடு



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற போதை தடுப்பு விழிப்புணர்வு முகாமில் போதை பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை வெளியிட்டார். அருகில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சஜ்ஜித், உதவி ஆணையர் (கலால்) முருகன், மாவட்ட சமூக நல அலுவலர் உமா.

# 2 புதிய ஆம்புலன்ஸ் சேவை: அமைச்சர் பிஆர்என் திருமுருகன் துவக்கி வைப்பு



புதுச்சேரி, நவ. 6–

புதுச்சேரி அரசின் போக்குவரத்து துறையின் கட்டுப்பாட்டின் கீழ் நிர்வாகிப்படுகின்ற சாலை பாதுகாப்பு நிதியின் மூலம் புதிய இரண்டு ஆம்புலன்ஸ் வாகனம் ரூ. 26,65,336 மதிப்பில் வாங்கப்பட்டு காரைக்கால் நேரு நகர் துணை இயக்குநர் நலவழித்துறை அலுவலகத்தில் புதுச்சேரி குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் பிஆர்என் திருமுருகன் தலைமையில் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இரண்டாம் வாகனம் டிஆர் பட்டினத்தில் சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன் முன்னிலையில் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

இவ்விழாவில் என்ஆர் காங்கிரஸ் பிரமுகர், கூட்டணி கட்சி பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# காலாப்பட்டு அரசு பள்ளியில் கலெக்டர் ஆய்வு

## மாணவிகளுடன் கலந்துரையாடல்



புதுச்சேரி, நவ. 6–

காலாப்பட்டு அரசு பள்ளியில் ஆய்வு மேற்கொண்ட கலெக்டர் குலோத்துங்கன் மாணவிகளிடம் கலந்துரையாடினார்.

புதுச்சேரியில் உள்ள அரசு பள்ளிகளில் கலெக்டர் குலோத்துங்கன் அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு வருகிறார். மேலும் பள்ளி மாணவ மாணவியரிடம், பாடங்கள், பொது அறிவு, எதிர்கால லட்சியங்கள் உள்ளிட்டவைகள் குறித்து கலந்துரையாடுகிறார். பள்ளி மாணவர்களும் கலெக்டருடன் ஆர்வமாகவும், உற்சாகமாகவும் கேள்விகளுக்கு பதில் அளிக்கின்றனர். இந்த நிலையில் காலப்பட்டு பகுதி, எம்.ஓ.எச்., பாரூக் மரைக்காயர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கலெக்டர் குலோத்துங்கன் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

அங்கு அரசு திட்டங்களின் கீழ், பள்ளியில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து துணை முதல்வரிடம் கேட்டறிந்தார். மேலும், பள்ளியின் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக்கூடம் உள்ளிட்ட இடங்களை ஆய்வு செய்தார்.

இதைத் தொடர்ந்து, 10 மற்றும், பிளஸ் 1 மாணவிகளுடன் பொது அறிவு, காலநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதல் குறித்து கலந்துரையாடினார்.

# சிறப்பு குழந்தைகளுக்கு விளையாட்டு போட்டி



சேலம், நவ. 6–

சேலம் மாவட்டத்தில் அறிவு சார் குறைபாடு உடையவர்களுக்கான சிறப்பு குழந்தைகளுக்கான சிறப்பு விளையாட்டு போட்டிகள், சிறப்பு ஒலிம்பிக் பாரத் சார்பாக மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் 200க்கும் மேற்பட்ட சிறப்பு பள்ளி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக சேலம் மாவட்ட உதவிக்கரம் மாற்றுத்திறனாளர் நல்வாழ்வு சங்கத் தலைவர் டாக்டர் அத்தியண்ணன் கலந்துகொண்டு பலூன் பறக்கவிட்டு துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு ஒலிம்பிக் பாரத் சேலம் மாவட்டத் தலைவர் டாக்டர் சுஜாதா அருண்குமார், செயலாளர் ஆனந்தன், துணைத் தலைவர் வாசுகி விஜய்கிருஷ்ணன், பொருளாளர் தாமஸ் பொன்னையன், பேமிலி கமிட்டி நம்பர் ஹேமா மற்றும் உடற்கல்வி ஆசிரியர் இளங்கோ ஆகியோர் நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைப்பு செய்திருந்தார்கள்.

# ஆஸ்திரேலியாவில் இந்திய சபாநாயகர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம்



புதுச்சேரி, நவ. 6–

காமன்வெல்த் பாராளுமன்ற கூட்டமைப்பிற்கான தேர்தல் குறித்து இந்திய மாநிலங்களின் சபாநாயகர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் சிட்னி நகரில் நேற்று நடந்தது. ஆஸ்திரேலியா நாட்டில் உள்ள சிட்னி நகரில் கடந்த 3ம் தேதி முதல் 8ம் தேதி வரை நடைபெறும் 67 வது காமன்வெல்த் நாடுகளின் சபாநாயகர் மாநாடு நடந்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, நாளை 7ம் தேதி நடைபெற உள்ள காமன்வெல்த் பாராளுமன்ற கூட்டமைப்பிற்கான தேர்தல் குறித்து நேற்று காமன்வெல்த் பாராளுமன்ற கூட்டமைப்பின் பொருளாளரும், இந்திய நாட்டின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுராக் ஷர்மா தலைமையில் இந்திய மாநிலங்களின் சபாநாயகர்கள் ஆலோசனைக் கூட்டம் சிட்னி நகரில் உள்ள ஷாங்க்ரிலால் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் புதுச்சேரி மாநில சட்டப்பேரவை தலைவர் செல்வம், தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் அப்பாவு, கர்நாடக சட்டப்பேரவை தலைவர் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களின் சட்டப்பேரவை மற்றும் மேலவை தலைவர்கள் கலந்துகொண்டனர்.

# நடிகை கஸ்தூரியை கைது செய்ய வேண்டும்-தெலுங்கர் சிறுபான்மையினர் சமூக கூட்டமைப்பு கோரிக்கை



சேலம், நவ. 6–

தேசிய தெலுங்கர் சிறுபான்மையினர் சமூக கூட்டமைப்பு மாநில தலைவர் நாகா. அரவிந்தன் சேலம் டவுன் கன்னிகா பரமேஸ்வரி தேவஸ்தான வளாகத்தில் செய்தியாளர்கள் சந்திப்பு நடத்தினார். அதில் அவர் கூறியதாவது, நேற்று முன்தினம் சென்னை எழும்பூரில் நடைபெற்ற பிராமிணர்கள் கூட்டத்தில் திரைப்பட நடிகை கஸ்தூரி தெலுங்கு மக்கள் வரலாறு தெரியாமல் தெலுங்கு மக்களுடைய மனதை புண்படுத்தும் விதமாக மிகவும் மோசமாக பேசியுள்ளார். 300 ஆண்டுகளுக்கு முன் மன்னர்களின் அந்தப்புரத்திற்க்கு சேவை செய்ய வந்த தெலுங்கர்கள் என பேசி தெலுங்கு பேசும் மக்களை மிகவும் கேவலமாக பேசியுள்ளார். அவருடைய பேச்சுக்கு தேசிய தெலுங்கர் சிறுபான்மை சமூக கூட்டமைப்பு சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் நடிகை கஸ்தூரியை உடனடியாக கைது செய்ய வேண்டும் என தமிழக முதலமைச்சரை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் நடிகை கஸ்தூரி பேட்டி அளித்துள்ளார். அந்தப் பேட்டியில் நான் தெலுங்கர்களைப் பற்றி பேசவில்லை. ஒரு குடும்பத்தை பற்றி தான் பேசுகிறேன் என்றும் அவர்களும் தெலுங்கு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தான் மேலும் தமிழக அரசையும் மிக கேவலமாக பேசியுள்ளார். தமிழகத்தில் சிறப்பாக ஆட்சி செய்து வரும் தமிழக முதலமைச்சரையும் கேவலமாக பேசி வரும் நடிகை கஸ்தூரியை கைது செய்ய வேண்டும் என தேசிய தெலுங்கர் சிறுபான்மையினர் சமூக கூட்டமைப்பு சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றோம். மேலும் சென்னையில் மிக விரைவில் தமிழக டிஜிபியை நேரில் சந்தித்து தெலுங்கர் சிறுபான்மையினர் சமூக கூட்டமைப்பு சார்பில் எங்களது கோரிக்கை வைத்து நடிகை கஸ்தூரியை கைது செய்ய வலியுறுத்தி மனு அளிக்க உள்ளோம். மேலும் நடிகை கஸ்தூரி பொது மன்னிப்பு கேட்க வேண்டும். பொது மன்னிப்பு கேட்டால் தான் இந்த பிரச்சனை தீர்வுக்கு வரும். இங்கு மட்டுமல்லாமல் ஆந்திரா, தெலுங்கானா அனைத்து இடங்களிலும் தெலுங்கு பேசக்கூடிய மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மிக விரைவில் சென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என தெரிவித்துக் கொள்கிறோம். என்று இவ்வாறு தெரிவித்தார். இதில் ஆர்.கே. ஜெயக்குமார், முரளி, வெங்கடேசன் பலர் உடன் இருந்தனர்.

# கோட்டுச்சேரி மேடு மீனவர் கிராமத்தில் சுனாமி விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்ச்சி



காரைக்கால், நவ. 6–

காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பில், கோட்டுச்சேரி மேடு மீனவர் கிராமத்தில் சுனாமி விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்ச்சி நேற்று சிறப்பாக நடைபெற்றது.

சுனாமி நினைவு தினத்தை ஒட்டி, புதுச்சேரி அரசு, காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பில் ஆண்டுதோறும் கடலோர கிராமங்களில் சுனாமி ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, நேற்று காலை சரியாக காலை 9.30 மணிக்கு, சுனாமி ஏற்பட்டதாகவும், தொடர்ந்து, சரியாக 9 மணிக்கு காரைக்காலை அடுத்த கோட்டுச்சேர் மேடு மீனவ கிராம பகுதியில், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, முதல் தகவல் மாவட்ட தகவல் கட்டுப்பாட்டு அறைக்கு வந்தது. தொடர்ந்து, கலெக்டர் மணிகண்டன் தலைமையில் அனைத்து துறைகளின் அதிகாரிகளும், அவர்களின் குழுக்களும் குறிப்பிட்ட கடற்கரை ஓரங்களில் பொதுமக்களிடம் விழிப்புணர்வு எச்சரிக்கை செய்து, அவர்களை மீட்டு ஏற்கனவே தயார் செய்யப்பட்ட பாதுகாப்பான இடங்களில் அவர்களை பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாகனத்தில் ஏற்றிச்சென்று தங்க வைத்தனர். மேலும், தங்குமிடங்களில் பொது மக்களுக்கு இருக்க இடம் மற்றும் தேவையான உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவை அனைத்தும் மிகவும் தத்ரூபமாக நடைபெற்றது. இந்த ஒத்திகை நிகழ்வில் பேரிடர் மேலாண்மை துறையின் துணை கலெக்டர் வெங்கடகிருஷ்ணன், காரைக்கால் மாவட்ட துணை கலெக்டர்(வருவாய்) அர்ஜுனன் ராமகிருஷ்ணன், குடிமைப் பொருள் வழங்கல் துணை இயக்குனர் சச்சிதானந்தம், உள்ளாட்சித் துறை துணை இயக்குனர் சுபாஷ், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுப்பிரமணியன் மற்றும் அனைத்து அரசுத்துறை அதிகாரிகள் ஆப்தமித்ரா மற்றும் தன்னார்வலர்களும் கலந்துகொண்டு அவவரர் பணிகளை சிறப்பாக செய்தனர்.

இறுதியாக கலெக்டர் மணிகண்டன் கோட்டுச்சேரிமேடு உள்ளிட்ட சுனாமி ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்ற இடங்களுக்கு நேரில் சென்று, ஒத்திகை நிகழ்ச்சியை சிறப்பாக நடத்திய அதிகாரிகளை பாராட்டினார். மேலும் இதுபோன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டால், அரசுத்துறை அதிகாரிகள், இதேபோன்று முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

# உருளையன்பேட்டை தொகுதியில் சிமெண்ட் சாலை, குடிநீர் குழாய், மின் கேபிள் அமைக்கும் பணி: நேரு எம்.எல்.ஏ., ஆய்வு



புதுச்சேரி, நவ. 6–

புதுவை உருளையன்பேட்டை தொகுதிக்குட்பட்ட புதுப்பாளையம் வார்டு தென்னஞ் சாலை ரோடு, கண்ணன் நகர் கோவிந்தப் பிள்ளை வீதியில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி நடைபெற உள்ளது.

புதிய பாதாள கழிவுநீர் சாக்கடை இணைப்புகள், மின் கேபிள், குடிநீர் குழாய்கள் அமைப்பது குறித்தும், மழைக்காலங்களில் மழைநீர் எளிதாக வெளியேறும் வகையில் வடிவமைப்பு செய்வது குறித்தும் நேரு எம்.எல்.ஏ., அரசு அதிகாரிகளுடன் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது புதுச்சேரி அரசு பொதுப்பணித்துறை நீர்ப்பாசன கோட்ட செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், பொதுப்பணித்துறை கட்டிடங்கள் மற்றும் சாலைகள் மத்திய பிரிவு செயற்பொறியாளர் சீனிவாசன், நகராட்சி உதவி பொறியாளர் நமச்சிவாயம், பொதுப்பணித்துறை பொது சுகாதார குடிநீர் வழங்கல் பிரிவு இளநிலை பொறியாளர்கள் வெங்கடேசன், சங்கர், மின்துறை இளநிலை பொறியாளர் கார்த்திகேயன், ஒப்பந்ததாரர் குணசேகரன் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.





OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007



# 2.5 சதவீதம் வாக்குகள் வித்தியாசத்தில் டிரம்ப் வெற்றி

# விழுப்புரத்தில் வளர்ச்சி திட்ட பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஆய்வு





# பாம்பன் புதிய பாலம் 20ந் தேதிக்குள் திறப்பு?


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 6-11-2024 புதன்கிழமை •வெளியூர்: 7-11-2024 வியாழக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்